உஷா ராம்தாஸ்

March 4, 2014

# சுதந்திரமும் கட்டுப்பாடும்

சுதந்திரம் எனில் கட்டுப்பாடில்லை என்பது வழக்கு. **சுதந்திரத்தை சுபீட்சமாக்குவது கட்டுப்பாடு என்பது உள்ளது.** வாழ்வில் எத்தனை அம்சங்களுண்டோ – அவை எண்ணற்றவை – சுதந்திரம் அத்தனை வகையானது. கட்டுப்பாடும் அத்தனை வகையானது. ஒவ்வொரு வகை சுதந்திரமும் அதற்குரிய கட்டுப்பாட்டால் பலன் தரும். பலன் என்பது பாலில் உள்ள நெய்யை தயிர் மூலமும் வெண்ணெய் மூலம் பெறுவது **முடிவான பலனை மூலத்தையறிந்து முறையாக படிப்படியாக பொறுமையாகப் பெறும் திறன்.** நாட்டுச் சுதந்திரம் வேறு, வீட்டுச் சுதந்திரம் வேறு. அன்னியன் விலகுவது நாட்டுச் சுதந்திரம். அன்னியமாக இல்லாதது வீட்டுச் சுதந்திரம். **ஒருவகையில் வீட்டுச் சுதந்திரம் சுதந்திரத்தை இழந்து பெறும் பண்பு.** குறள் கூறும் நாளிழுக்கும் அதன் சிகரமான பண்பு. ஊரில் எழும் சுதந்திர வாழ்க்கை வீட்டுச் சுதந்திரத்தை இழப்பதால் பெறுவது. கட்டுப்பாடு கடமையால் கண்ணியமாக உருவாகும் மலர் சுதந்திரம் தரும் பண்பு.

ஆன்மா என்பதை சுதந்திரம் என்று கூறும் அளவுக்கு அதில் தடை வரையறையில்லை. பகவான் தன் யோகத்தில் அடிப்படையான தத்துவங்களான அனந்தம், காலம், சுதந்திரம், ஆத்மா, சிருஷ்டி என்பவற்றிற்கு அவை தம் நிலையைக் கடக்கும் வகையில் பொருள் கொண்டிருக்கிறார். அவற்றுள் சுதந்திரம் ஒன்று. முதன்மையானது எனக் கூறலாம். **சுதந்திரம் தன்னையிழக்கும் சுதந்திரமும் உள்ளது என்கிறார்.** இதனால் மரபில் மோட்சத்தை நாடும் யோகம் அவர் கையில் பிரபஞ்சத்தைத் திருவுருமாற்றும் யோகமாகிறது. இது தத்துவம். நடைமுறை என்ன? வாழ்வு கர்மத்திற்குட்பட்டது, அதை ஜாதகம் கூறும், பிறப்பு முதல் இறப்பு வரை வியாபிக்கும் வாழ்வுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம். நமக்குக் கட்டுப்படாதது வாழ்வு. வாழ்வில் எதுவும் நம் கையிலில்லை. பகவான் கூறுபவை வேறு. கர்மம் மனிதனுக்குக் கட்டுப்படும், பிறப்பிற்கு முன்னும், இறப்பிற்குப் பின்னும் வாழ்வு நீடிக்கிறது, வாழ்வு நமக்குக் கட்டுப்பட்டது. நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டாம், நடைமுறையை மேலும் விளக்கமாகக் கூறினால், நாம் உயிர் வாழ விரும்பும்வரை வாழலாம், நம்மைத் தொடும் எந்த சட்டமும் – வீடு, ஊர், சர்க்கார், சமூகம், வாழ்வு – நமக்குக் கட்டுப்பட்டது. நாம் எங்கும் குடியிருக்கலாம், எந்தத் தொழிலும் செய்யலாம், நாம் செய்வன அனைத்தையும் சர்க்காரும், சமூகமும், வாழ்வும் ஏற்கும் என்றாகும். மேலும் விளக்கமாகக் கூறினால் நம் தொழில், வீடு, செல்வ நிலை, செல்வாக்கை நாமே நிர்ணயித்துக் கொள்ளலாம். **பெம்பர்லிக்கு நான் தலைவியாக வேண்டும் என்றாலும், ஓடிப் போன லிடியா அவனை மணக்க வேண்டும் என்றாலும், ஊரை விட்டுப் போன பிங்லி வந்து தமக்கையை மணக்க வேண்டும் என்றாலும் அவை நடக்கும்.** இது எப்படி நடக்கிறது, ஏன் நடக்கிறது அதற்கும் சுதந்திரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் என்ன தொடர்பு?

நாம் வீட்டைவிடப் பெரிய ஆத்மாவையுடையவர்கள். நம்மால் வீட்டிற்கு சேவை செய்ய முடியும். அதைக் கட்டுப்பாடாக ஏற்றால் வீடு நமக்கு பொருள், செயல், உரிமை, வழக்கில் நம்மை முழுவதும் ஏற்றுக் கொள்ளும். தடையாக இருக்காது, கருவியாக அமையும். **நம்மை உருவாக்கும் கருவியாக உள்ள வீடு நம்மால் உயரும் அரங்கமாகும்.** அதனால், அந்த சேவையை வீடு ஏற்பதால், நாம் ஊருக்கு அதே போன்ற சேவையை செய்யும் கருவியாக வளர முடியும். ஊர் அக்காரணத்தால் நமக்கு எல்லா வகையிலும் கட்டுப்படும். ஊர் சேவையை ஏற்பதால் உலகமும், உலகம் நம் சேவையை ஏற்பதால் வாழ்வும் நமக்குக் கட்டுப்படும். புயல் கடலில் உருவானால்

அது தேவையில்லை என்று நாம் முடிவு செய்தால் வாழ்வு நம் முடிவை ஏற்றுப் புயலை அடக்கும். வாயு , அக்னி பகவான்களுக்குள்ள மந்திரத்தைக் கண்ட ரிஷிகள் இந்தத் திறமையைப் பெற்றனர். ஒரு கொல்லையில் நெருப்பு பற்றியது. வைக்கலை எட்டும் நிலையில் , நிலத்தின் சொந்தக்காரர் உச்சரித்த வாயு மந்திரத்தால் காற்று திசைமாறி எதிராக அடித்தது. சொந்த விஷயம் பாதிக்கப்படும் நேரம் அன்பர்கள் பிரார்த்தனையால் இது போன்ற பலனை அனைவரும் பெறுவதுண்டு. ஒரு சட்டம் அன்பரைப் பாதிக்கும்பொழுது அவர் பிரார்த்தனை அந்தச் சட்டத்தையே மாற்றி அனைவரும் பலன் பெறச்செய்வது அனைவரும் அறிந்த செய்தி. **இதைக் கடந்த உயர்ந்த நிலைகள் உண்டு.** இதுவரை கூறியவை கேட்டுப் பெறுபவை. கேட்கும் திறனழிந்தபின் அன்னை நாம் கேட்காமலேயே , சந்தர்ப்பம் நிர்ப்பந்தம் செய்யுமானால் தன் வழக்கத்தை மாற்றி அருள் செய்ததும் உண்டு.

சுதந்திரம் அதிகமானால் சுபீட்சம் பெருகும். பெண்களுக்குப் படிக்கச் சுதந்திரமில்லாத காலம் மாறி அவர்கள் படிக்க ஆரம்பித்து வேலைக்குப் போன பொழுது குடும்ப வருமானம் இருமடங்காயிற்று. பாடுபவருக்கும் , விளையாடுபவருக்கும், படிப்பவருக்கும் உழைப்பவருக்கும் , சமையல் செய்பவருக்கும் சுதந்திரம் உயர்வு தரும். பாட்டு உள்ளுறை உற்சாகத்தால் எழுவது. சட்டதிட்டங்கட்குட்படாது. பாடும் நேரம் குறிப்பிடப்பட்டாலும் உற்சாகம் சுருங்கும். **எல்லா செயல்களும் தெய்வச் செயல். தெய்வம் மனித சட்டங்களை ஏற்காது.** ஏற்றப்பாட்டு இயல்பாக எழுவது. சட்டதிட்டங்கட்கு உட்பட்டதில்லை. அதனால் ஏற்றப்பாட்டிற்கு எதிர்பாட்டில்லை என்ற வழக்கு ஏற்பட்டது. பொறாமை எழுவது கட்டுப்பாடு கடுமையாகி பாரபட்சம் கொடுமையாகும்பொழுது பொறாமைத் தீ கொழுந்துவிட்டெரியும். கிளன்டோமான் பள்ளியில் சுதந்திரம் முழுமையானது. **அங்கு சிறுவர்கள் போட்டியிடுவதில்லை. பொறாமைப்படுவதில்லை** . Summer Hill (சம்மர்ஹில்) என்ற பள்ளி அறுபது அல்லது எழுபது ஆண்டாக இங்கிலாந்தில் செயல்படுகிறது. பள்ளியில் மொத்த மாணவர் எண்ணிக்கை அறுபத்தி ஐந்து. வகுப்பில்லை , அட்டவணையில்லை, attendance இல்லை, பரிட்சையில்லை. இதுவரை அப்பள்ளியில் பயின்றவர் வாழ்வில் உயர்ந்த சிறப்புப் பெறத் தவறியதில்லை. சுதந்திரம் என்ற பெயரில் எதையும் செய்ய அனுமதித்தால் குடும்பமோ, ஸ்தாபனமோ அழியும்.

**கட்டுப்பாடு சாதிக்கும் அளவு சுதந்திரம் தேவை.**
**தன்னையே அழிக்கும் சுதந்திரம் சுதந்திரமில்லை அழிவு.**

இந்திய சுதந்திரம் வருமுன் மக்கள் எதையும் செய்ய நினைக்கவுமில்லை. 1947 இல் வந்த சுதந்திரம் 1977 இல் தான் பலனளித்தது. **மனிதன் முன்னுக்கு வர வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி செயல்பட சுதந்திரம் வந்து 30 ஆண்டுகளாயிற்று.** காதல் திருமணம் பிரபலமான இலட்சியம். நம் நாட்டில் பெற்றோர் திருமணம் செய்து வைக்கின்றார்கள். இளைஞன் தான் விரும்பும் பெண்ணை மணக்க அனுமதியில்லாவிட்டால் மனம் புழுங்கி சுருங்குகிறான். உயிரை மாய்த்துக் கொள்ளவும் முடிவு செய்கிறான். பெண் இஷ்டத்திற்கு விட்டு விட்டால், அவள் விரும்பிய இளைஞனை மணக்கிறாள். குதூகலமாக , ஆர்ப்பாட்டமாக அவள் வாழ்வு பரிமளிக்கிறது. பல நேரம் பெரியவர்கள் அனுபவத்தால் தவிர்க்கும் அசம்பாவிதங்களை இளைஞர்கள் அறியாமையால் ஏற்று அவதிப்படுகிறார்கள். கட்டுப்பாட்டிற்கு எது எல்லை , சுதந்திரம் எந்த அளவுக்குத் தேவை என்பதைக் கண்டறிய திருமணம் நல்ல அரங்கம். பெற்றோர் பிள்ளைகளுக்குச் சுதந்திரத்தை மறுத்து அவர்கள் வாழ்வைப் பாழ் செய்கின்றனர். இளம் வயதில்

ஆசையை ஆர்வமாகக் கருதி அவசரமாகத் திருமணம் செய்து அடுத்த நாளே வாழ்வில் அவதி மலர்வது ஏராளம். பெற்றோர் செய்து வைத்த திருமணம் சிறப்பாக இருக்கிறது. காதல் திருமணம் கனிந்த வாழ்வையளிக்கிறது. இவை நாடு பெற்ற அனுபவம். இதன் சாரம் என்ன ? எந்த செயலுக்கும் அறிவும் , அனுபவமும் தேவை. அவையுள்ள அளவுக்கு சுதந்திரம் வாழ்வைச் சிறப்பாக்கும். அவசரமும் அறியாமையும் எதையும் பாழ் செய்யும். அவையிருந்தால் சுதந்திரம் சர்வ நாசம் தரும். இதைத் தனி மனிதன் நிர்ணயிக்க முடியாது. சமூகம் நிர்ணயிக்க வேண்டும். சமூகத்திற்கு எல்லா நேரமும் , எல்லோரும், எல்லா விஷயத்திலும் கட்டுப்பட முடியாது. அறிவும் தெளிவும் உள்ள இடத்தில் சொந்த முடிவும் , அனுபவம் தேவைப்பட்ட இடங்களில் பெற்றோர் முடிவும் பயன்படும். **பெற்றோர் பிள்ளைகள் நலனை விரும்புவதே வழக்கம். பிள்ளைகள் பெற்றோரைக் காப்பாற்ற கசங்குவதில்லை.** சம்பாதிக்கும் குழந்தையின் வருமானத்தை சுதந்திரமாகப் பெற்றோர் அனுபவிக்க திருமணம் செய்யாத சுயநலமான பெற்றோர் உண்டு. பெற்றோரைப் புறக்கணிக்கும் பிள்ளைகளும் உண்டு. எதை எப்படி நிர்ணயம் செய்வது ? உரிமை யாருக்கு? அன்பருக்கு அவை பிரச்சினையில்லை. சமர்ப்பணத்தை ஏற்ற அன்பர் இளைஞனானாலும், பெற்றோரானாலும் சமர்ப்பணம் தவறாது தவற்றை விலக்கும். வாழ்நாள் முழுவதும் விலக்கும். சமர்ப்பணத்தை ஏற்காத அன்பர் தன் அறிவு , அனுபவம், **நாணயத்தின்** அடிப்படையில் அன்னையை நினைத்து செயல்பட்டால் பெரும் குறைகள் விலகும் , மனம் நேர்மையாக உள்ளவரை அறிவு பெரும்பலன் தரும். நேர்மையும் , அறிவும், அனுபவமும், நல்லெண்ணமும் சேர்ந்து தருவதை சமர்ப்பணம் தரும்.

**இறைவனை மனித வாழ்வில் நான்கு வகையாக பகவான் குறிப்பிடுகிறார்.** 1) இறைவன், 2) ஜோதி, 3) சுதந்திரம், 4) அமரத்துவம். அறிவு இறைவனை ஜோதியாகக் காண்கிறது. உடல் இறைவனை நாடி சித்தித்தால் மரணம் அழிகிறது. மரணமிலாப் பெருவாழ்வே உடலுக்கு இறைவன். ஆத்மாவுக்கு இறைவன் **சுதந்திரமாக சித்திக்கிறான்.** வாழ்வில் அதிகாரமுள்ளவர் பிறர் சுதந்திரத்தை எடுத்துக் கொள்கின்றனர். **எவரும் முன் வந்து பிறருக்குத் தன் வாழ்வில் சுதந்திரம் தருவதில்லை.** அரிபொருளாக வாழ்வில் நடப்பவை கண்ணில் பட்டால் அது ஜீவனின் ஆழத்தில் சுதந்திரத்தை நமக்கு விளக்கும். ஒரு டாக்டருக்கு 1940 இல் மூன்று பிள்ளைகள், மூன்று பெண்கள். வசதியான குடும்பம் , சொத்து, பணம், காருடன் வாழ்ந்தவர் இறந்து விட்டார். பணமிருந்ததால் அனைவரையும் கல்லூரியில் சேர்த்து பட்டம் பெற உதவினார் . அவரில் ஒரு பெண், சுபாவமாகவே தனக்கு வேண்டியது எதையும் கேட்க மாட்டாள்.

**தாயார், உடன் பிறந்தவர் எவரும் அவளுக்கு எதுவும் தருவதில்லை.**
அவளைக் கல்லூரியில் சேர்க்கவில்லை.

வீட்டில் உள்ளவர் , பெற்றோர், பிள்ளைகள், உறவினர், நண்பருக்கு நம் வாழ்வில் சுதந்திரம் கொடுத்தால் என்ன நடக்கும் என கற்பனை செய்ய முடியாது. என் அனுபவத்தில் கண்ட சிலவற்றை எழுதுகிறேன்.

- ஒருவர் காரில் ஐந்து பேர் உட்கார்ந்து கொண்டு அவரை பஸ்ஸில் வரும்படி கூறி ஐவரும் காரில் சென்றனர்.
- இழந்த முதலை பெற்று , அதைப் பலமடங்கு பெருக்கியபின் வருமானத்தை மெனக்கெட்டு அழித்தவர் அவரை நோக்கி, “**என்னை ஏமாற்றி விட்டாய்**” என்றார்.

- பட்டத்தைக் கனவிலும் காண முடியாதவருக்கு பட்டம் பெற உதவியவரை பெற்றவர் “உன்னால் நான் கெட்டுப் போனேன்” என்றார்.
- மகன் ஜாதகம் தகப்பனாரை ஜெயிலுக்கு அனுப்பும் என்பதால் தகப்பனார் மகனைக் கொன்றார்.
- “உன்னுடைய சொத்தை நிலம், வீடு, எனக்குக் கொடு” என்று கேட்டவர் சிலர்.
- 30 வருஷமாக செய்த வேலையின் பலனை அடுத்தவருக்கு வலிய கொடுத்ததால் , பெற்றவர் **கொடுத்தவரை ஒரே நாளில் விலக்கிய பெருமையை அவரிடமே கூறி சந்தோஷப்பட்டார்.**
- தன்னை அழிக்க , அவமானப்படுத்த, உயிரை எடுக்க தொடர்ந்து முழுமுயற்சி செய்யும் பெரியவருக்கு எவரும் செய்யாத சேவை செய்தவரை பெரியவர் கொல்ல முன் வந்தார்.
- 46 வருஷம் தன் குடும்பத்திற்கு முழு பண உதவி செய்தவரை விலக்கி, அவமானப்படுத்தியவர் ஒருவர்.
- **சுதந்திரம் மனிதனுக்கில்லை. பெற்றால் அடுத்தவரை அழிப்பான்.** முக்கியமாக கொடுத்தவரை முழுவதும் அழிப்பான்.
- இவ்வுண்மைகளை அறிந்த நம் பண்பு இந்த விவேகத்தைப் பழமொழிகளாக்கியுள்ளது.

அவற்றுள் சில 1) தீட்டிய மரத்தில் கூர் பாய்வது , 2) வளர்த்த கடா மார்பில் பாய்வது , 3) அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார் , 4) கொலை செய்வாள் பத்தினி , 5) தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு. சுமார் நூறு பழமொழிகள் இது போல் காணலாம். **ஐயோ பாவம் எனில் ஆறு மாத பாவம் கைமேல் வரும்** ; பாம்பிற்குப் பால் வார்த்தது போல். எனது அனுபவத்தின் சுருக்கத்தை ஐந்து ஆண்டுகட்கு முன் கீழ்க்கண்டவாறு எழுதினேன்.

**“உன்னை நான் அழிக்க முயலும்பொழுது**
**எனக்கு உதவ மறுத்த நீயும் ஒரு மனிதனா?”**

**மனித சுபாவம் ராட்சச சுபாவம். அகங்காரம் நிறைந்தது. அதற்கு நாம் செய்யக்கூடிய சேவையொன்றுளது.** அதற்குரிய நேரம் வரும்பொழுது அக்கடமையை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் மனதில் ஈரம் இரக்கமில்லாமல் அதை வேரோடு அழிக்க வேண்டும். பகவான் கூறுவது அது. அவர் அதையும் கடந்து சென்று **அந்த சுபாவத்தை திருவுருமாற்ற வேண்டும் என்கிறார்.** ஏனெனில் இக்கொடிய சுபாவம் பிரபஞ்ச நன்மை அனைத்தும் திரண்ட பெருஉருவம். பூரண யோகத்தின் முதல் அடிப்படை சித்தியை பகவான் அலிப்பூர் ஜெயிலில் பெற்ற பொழுது – அது 1908 இல் – அதில் விஸ்வரூப தரிசனத்தில் அர்ஜுனன் கண்ட கோரமான பகுதியில்லை. கோரம் தீமையின் ஆன்மீக ரூபம். பூரண சுதந்திரம் என்றால்

**தீமை தானே தன் தீமையை உணர்ந்து**
**தன்னை திருவுருமாற்றும் ஆன்மீக சூழலாகும்.**

வாழ்வில் பரம்பரைத் திருடன் தானே தன் திருட்டை உணர்ந்து அதைத் தலைகீழே மாற்ற முன் வருவது போன்ற நிலை. திருடன் தண்டனையால் திருந்துவான் என்பது உலகம். திருடனுக்கு அவன் கஷ்டப்படும் தண்டனை தரக்கூடாது. தானே விரும்பி மாறும் அறிவு பெறும் சூழலை

அவனுக்கு அளிக்கும் தண்டனை தர வேண்டும் என்பது 20ம் நூற்றாண்டு அனுபவம். 10 வயது பையனுக்கு அவன் விரும்பும் சுதந்திரம் முழுவதும் கொடுத்தால் என்னவெல்லாம் செய்வான்.

— நாள் முழுவதும் விளையாடுவான் – அவன் நல்ல பிள்ளை.
— வாய்க்கு வந்தபடியே பேசுவான் – அது மனித சுபாவம்.
— பொருள்களை உடைத்தபடி இருப்பான் – கை சும்மாயிருக்காது.

அவனுக்கே உதவியான எதுவும் எந்த குழந்தையும் செய்வதில்லை. இது போன்ற சுதந்திரம் கொடுத்த பெற்றோர் கட்டுப்பாடு என வரும்பொழுது குழந்தை சார்பில் தாங்களே ஏற்பது கட்டுப்பாடு. அது முடியாது. முடியாத நேரம் குழந்தை மனம் கோணாதவாறு அவனால் பிறருக்குத் தொந்திரவு வராத கட்டுப்பாட்டுகளை அமுல்படுத்தலாம்.

விலங்கும், தாவரமும் சிருஷ்டியில் அப்படியேயுள்ளன. ஆரம்ப காலத்திலிருந்து மாறுதல் எதுவுமில்லை. ஏதாவது மாறுதலிருந்தால் அது மனித அறிவுக்கு இதுவரை புலப்படவில்லை. சரித்திரம் ஏற்பட்ட நாளாக மனிதனும் விலங்கு போலிருந்தவன் என அறிகிறோம். இன்று அவர் வாழ்வு நூறு (அல்லது) ஆயிரம் கட்டங்களைக் கடந்து வந்து விட்டது. நாம் சிறுவராக இருந்த உலகம் இன்று மாறியுள்ளதை நம்மால் அறிய முடிகிறது. கடந்த பல ஆண்டு மாற்றம் நம் கருத்துக்கும் புலப்படுகிறது. 500 ஆண்டு மாற்றம் கற்பனைக்கு எட்டுகிறது. **மனிதன் முன்னேறியதும் நாகரீகமாக வாழ்வதும் நடந்த செயல்கள்**. இது மாற்றம், பெருமாற்றம், அனைவரும் விரும்பும் மாற்றம், நாகரீகம், பண்பு என நாமறியும் மாற்றம். எதுவும் பழைய காலத்திற்குப் போக விரும்புவதில்லை.

**இந்த பிரம்மாண்டமான உயர்ந்த மாற்றம் ஏற்பட்டதற்கு முதற் காரணம் கட்டுப்பாடு.**
**இரண்டாம் காரணம் கட்டுப்பாடு சுதந்திரம் என்ற சூழலில் செயல்பட்டதேயாகும்.**

கட்டுப்பாடு இல்லாமல் கடைத்தெருவில்லை. சட்டமில்லாவிட்டால் ரோடில் கார் போக முடியாது. குறுக்கும் நெடுக்குமாக போகும் மனிதர்களும், வாகனங்களும் போக்குவரத்தை ரத்து செய்யும். ஒருவர் வீட்டிலுள்ள பொருளை அடுத்தவர் எடுத்துப் போகக் கூடாது என்பது கட்டுப்பாடு. வீட்டில் பனியனுடனிருப்பவன் வெளியில் போகும்பொழுது சட்டை போட்டுக் கொண்டு போவது அவனே ஏற்படுத்திய சுயகட்டுப்பாடு. மேடையில் ஒருவர் பாடும்பொழுது, பேசும்பொழுது கூட்டம் அமைதியாக இருப்பதும், சாப்பிட்டபின் கையலம்புவதும், படுக்கப் போகுமுன் கதவைத் தாளிடுவதும் எளிய செயல்களானாலும், அவசியமான கட்டுப்பாடுகளாகும். மனிதக் கூட்டம் மனித குலமானது நாகரீகம். மனித குலம் பிரியமுள்ள மக்களினமாக மாறியது பண்பு. நாகரீகமும், பண்பும் உயர்ந்த கட்டுப்பாடானால், கல்வி சமூகம் ஏற்றுக் கொண்ட புனிதமான கட்டுப்பாடு. எல்லோரும் கற்க வேண்டிய நிர்ப்பந்தமற்ற சுதந்திரம் உள்ள நாட்டுச் சூழலில் ஒருவன் பள்ளியில் சேர்ந்து கல்வி பெறும் கட்டுப்பாட்டை ஏற்பதால் அறிவற்ற முரட்டு மனிதன் அறிவுள்ள நாகரீகமான குடிமகனாகிறான். சங்கீதம் என்பது சாஸ்த்ரோத்தமான கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட சப்தம். வாயில் வந்தபடி பேசுவது உளறல், குளறல். அதையே நிதானமாக சிந்தித்துப் பேசுவது பேச்சு. பேச்சு இனிமையாவது பாட்டு, காவியம், சப்தம் சொல்லாகி, இனிமையை ஏற்று இசையாக மாறுவது கட்டுப்பாடு கணிசமாக செயல்படும் பல நிலைகள். வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தை செய்து பார் என்ற பழைய பழமொழிகளை மாற்றி **குடும்பத்தை நிறுவிப்பார் என்று கூற வேண்டும் என்று நான் எழுதுவதுண்டு.** நாட்டை ஆள்பவனுக்கு வீட்டை நிர்வாகம் செய்ய முடிவதில்லை. ஒரு

கட்சியில் பல ஆயிரம் மெம்பர்கள் தலைவர் பேச்சை ஏற்று நடக்கும்பொழுது அவர் வீட்டிலுள்ள பன்னிரண்டு பேர் முக்கியமான விஷயங்களில் தங்களிஷ்டப்படி தகப்பனார் நடக்க வேண்டும் என்றால் தலைவர் தொண்டர் இஷ்டப்படி செயல்பட வேண்டும். கட்சியில் கட்டுப்பாடு முக்கியம். குடும்பத்தில் கட்டுப்பாடு உண்டென்றாலும் சுதந்திரத்திற்குட்பட்ட கட்டுப்பாடு அது.

**கட்டுப்பாடு சுதந்திர சூழலில் பண்பாக மலரும்.**

வீட்டில் காரியம் நடப்பது அவசியம் என்பதை விட உள்ளவர் சந்தோஷமாக இருப்பது முக்கியம். எட்மண்ட் சிறையிலிருந்து தப்பி வெளிவந்து பெரும் செல்வத்தைப் புதையலாகப் பெற்று தன்னைச் சிறைக்கனுப்பிய துரோகிகள் செய்ததாக அவனறிந்த செய்திகளை ஆராய்ந்து உறுதிபடுத்திக் கொண்டான். சிறையில் அவன் பெற்ற அறிவு பேரறிவு. எந்த அறிஞரும் பெற்றதில்லை. எந்த அரசனுக்கும் கிடைக்காத அறிவு. அவன் பயின்றமொழிகள் பல. 5000 நூல்களைப் படித்து Faria அதன் சாராம்சம் 150 நூல்களிலிருப்பதை அவனுக்கு எடுத்துக் கூறி , விவேகத்தின் சிகரம் பொறுமை என்று உணர்த்தினார். அரேபியாவில் இஸ்லாம் பழக்கங்களையும் , விஸ்வாசத்தையும் எட்மண்ட் கற்றறிந்தபின்

**வாழ்வு தனக்குக் கட்டுப்படுவதைக் கண்டான்.**

அவனுக்கு துரோகம் செய்தவர்கள் பாபிகள். இறைவன் அவர்களைத் தண்டிப்பார். எட்மண்ட் தன்னைப் பொருத்தவரை ஓரளவு இறைவனுடைய திறமையைப் பெற்றதால் தானே அவர்களைத் தண்டிக்க முயன்று செய்த எல்லா முயற்சிகளும் தடையின்றி கூடிவருவதைக் கண்டான். மூன்று பேர் வாழ்விலும் பழிவாங்கும் முயற்சி பலித்தது. **மெர்சடஸ் தான் அவனுக்கு முக்கியம்.** அவளைப் பழிவாங்க அவன் மனம் இடம் தரவில்லை. பெர்னாண்டைப் வாங்கிய பழி மெர்சடெஸ்ஸை அதிக அளவில் பாதிக்கிறது. என்றாலும் செய்து முடித்து விட்டான். இரவு 12 மணிக்கு அவளே வந்தாள்.

**இது தர்மமா? எனக் கேட்டாள்.**

கையிலிருந்த துப்பாக்கி தானே விழுந்தது. பழி வாங்கும் சுதந்திரம் அவள் எழுப்பிய தர்மத்திற்குக் கட்டுப்பட்டு மனம் மாறி உயர்ந்து பண்பால் உன்னதம் பெற்றது அவன் நிலை.

உலகப் பெருந்தலைவர் அனைவரும் எழுதிய தலைப்பு கல்வி. பெருந்தலைவர்களில் சிந்தனையாளர்கள் முக்கியமாகக் கருதி எழுதுவது சுதந்திரம். ஸ்தாபனம் என்பது (Organisation) வெகு முக்கிய கருத்தானாலும் பலரும் அதைப் பற்றி எழுதவில்லை. ஒருவர் ( Freedom and Organisation) சுதந்திரமும் ஸ்தாபனமும் என்று எழுதியுள்ளார். ஸ்தாபனம் முறையான கட்டுப்பாடு செயலை முழுவதும் தழுவுவது நாம் பல நேரம் செய்வதறியாமல் திகைப்பதுண்டு. கையில் உள்ள வேலை தெரிந்ததானால் க்ஷணமும் தாமதிக்காமல் செய்கிறோம். (உ.ம்.) எழுதிய கடுதாசியை போஸ்ட் செய்ய உடனே போஸ்டாபீஸூக்குப் போகிறோம். பத்து லட்சம் பொறுமான பொருளை வாங்க வந்தவர் ஏழு லட்சத்திற்கு மேல் மதிப்பிடவில்லை என்றபொழுது அவருக்கு தெரியாத விவரமிருந்தால் எடுத்துச் சொல்கிறோம். உடனே பொருள் பத்துக்கு மேல் பொறும் என அறிந்து பத்துக்கு சம்மதப்படுகிறார். எடுத்துச் சொல்ல எதுவுமில்லாத நேரம் உண்டு. சொல்லி சாதிக்க முடியவில்லை என்ற நேரம் **சொல்லாமல் சாதிக்கலாம் எனத் தெரியுமாதலால்** , சொல்வதை நிறுத்தி விட்டால் , பேச்சு தடம் மாறி வேறொருவரால் மீண்டும் விஷயத்திற்கு வந்து காரியம்

பூர்த்தியாகிறது. அன்பருக்கு இந்த நேரம் முக்கியமான கருத்தொன்றுண்டு. சொல்லாமல் சாதிப்பதுவும் ஓர் எண்ணம். **அந்த எண்ணம் மனதிலிருப்பதை விட இல்லாமலிருப்பது மேல் என்பது அக்கருத்து**. அன்பருக்கு அக்கருத்து தெரிந்ததானாலும் , நினைவு வருவதில்லை. நினைவு வந்தாலும் செயல்படுத்த மனம் இடம் தராது. அன்பர் இதை நினைவாக , தெளிவாக செயல்படுத்தலாம். அன்பரல்லாதவர் அன்னை சூழலின் சாயலில் உள்ளவரானால் , அவருக்கு இது தோன்றப் போவதில்லை. அன்னை வாழ்வு மூலம் செயல்படுவார். வாழ்வு காலத்தால் இயங்குவது. காலம் கடந்தால் முக்கிய வேலைகள் முழுவதும் தவறும். காலம் பாஸிட்டிவாக இருந்தால் தவறாது, நெடுநாள் கடந்து சூழல் மூலம் பலிக்கும். அது போல் தான் கேட்ட விலையைவிட மூன்று மடங்கு அதிக விலைக்கு ஒருவர் தன் பொருளை விற்றார். அன்பர் அக்கருத்தைச் செயல்படுத்தினால் காலம் கடக்காமல் அதே நடக்கும். எண்ணத்தை கடந்த ஏற்றம் உண்டா ? உணர்ச்சி எண்ணத்தைக் கடந்தது. எண்ணத்தை எடுத்துச் சொல்லாமலிருக்கலாம். எண்ணம் மனதிலிருக்கும். **மனதிலும் அவ்வெண்ணம் கூடாது என்றால் தீவிரமாக எழும்** . எண்ணம் மனத்திற்குரியது. நாம் மனத்தைக் கடந்த ஆத்மாவிலிருந்து செயல்படுவது மேல் என்ற கருத்து நினைவுக்கு வந்தால் , எண்ணம் நினைவை விட்டகலும். அதே போல் உணர்ச்சியை அகற்றுவது கடினம். ஆனால் முடியும். அது முடிந்தால் காரியம் நடந்தபின்னும் நம்ப முடியாமலிருக்கும். அதையும் கடந்த நிலையுண்டா ? உண்டு. இவையெல்லாம் அதிக பலன் பெறும் வழி என்பதால் மேற்கொள்ளப்படுபவை. அந்த நினைவு இல்லாமலிருந்தால் , இருந்தால் அது கூடாது என்ற மனப்பான்மையிருந்தால் பார்லிமெண்டில் பேசியவரைக் கேட்ட பிரதமர் அவரை அழைத்து காபினட் (ஸ்டேட்) மந்திரியாக்கியது போல் பலனிருக்கும். நினைப்பது நினைவு. நினைக்காததும் நினைவாகுமா? **அது நினைக்கக்கூடாது என்ற இலட்சியம்.** இலட்சியம் அறியாமையின் இயலாமையாலிருக்கும். அறிவின் சிறப்பால் , முதிர்ந்த மனம் அடங்கிப் பெற்ற பண்பாலிருக்கும். அது உயர்ந்த மனநிலை.

**அம்மன நிலையே முடிவானதா?**

**அம்மனநிலையை சமர்ப்பணம் செய்வது அடுத்த கட்டம்.**

அதற்குரியது வாழ்க்கைப் பலனில்லை, யோகப் பலன். பகவான் ***'ஆத்ம சமர்ப்பணம்'*** என்ற அத்தியாயத்தில் யோகப் பலனையும் எதிர்பாராத சமர்ப்பணமே சமர்ப்பணம் என்கிறார். எந்த உயர்ந்த மனநிலையையும் சமர்ப்பணம் செய்வது மேல். எந்த உயர்ந்த ஆத்ம நிலையையும் மௌனம் – சமர்ப்பணம் செய்யலாம். சமர்ப்பணத்தின் நிலை அதனால் உயரும். உயரும் சமர்ப்பணம் அஸ்திவாரத்தில் அகல்வது அவசியம். அகன்று ஆழ்ந்த சமர்ப்பணம் சரணாகதியாகும். சரணாகதியும் நாம் உள்ள நிலையைப் பொருத்ததே. **எந்த நிலை சரணாகதிக்கும் அடுத்த உயர்ந்த நிலையுண்டு.** அடுத்த நிலையில்லாத சரணாகதி

**ஆத்மா சுப்ரீமான நிலை.**

அது யோகம் முடிந்த நிலை. பகவானும் , அன்னையும் அடைந்த நிலை நமக்குண்டு. அனைவருக்கும் உண்டு.

சுதந்திரம் மனநிலை , கட்டுப்பாடு முறை. சுதந்திரம் உள்ளது. கட்டுப்பாடு நாம் ஏற்படுத்துவது. உள்ளது ஆண்டவனின் அமைப்பு , கட்டுப்பாடு மனித சாதனை. ***'சுதந்திரமும் கட்டுப்பாடும்*** என்ற தலைப்பை **ஆண்டவன் அருளை மனிதன் அனுபவிக்கும் பாங்கு எனக் கொள்ளலாம்** . இதைச் செயலாகக் கண்ணுறுதலில் வீடு சிறப்பான அரங்கம். புறச் செயலும் அக உணர்வும் வாழ்க்கைப்

பண்பாக உருவாவதை கண்டு , அனுபவித்து, பண்பாக உருவாக்க திருமணம் உகந்தது. *Pride and Prejudice* கதையில் லிடியா கணவனைத் தேடுகிறாள். ஜேன் தன் மனநிலைக்கு உரிய உன்னத நிலையை நாடுகிறாள். எலிசபெத்திற்கு தேவையானது பெம்பர்லி. டார்சிக்கு தான் விரும்பிய பெண்ணை மணக்க வேண்டும். **எவரும் உயர்ந்த காதலை ( romance) இலட்சியமாகக் கொள்ளவில்லை.** படித்து பண்பு பக்குவமுள்ள தம்பதிகள் அன்பின் உச்சகட்ட காதலை அனுபவிக்க முயன்றால் அது முடியுமா என்பது கேள்வி. முடியாது என்பது உலக அனுபவம். **முடியும் என்பது என் கொள்கை.** எந்த கணவனும் மனைவியும் ஓரளவு இதை உணர முடியும். பொதுவாக திருமணமாகுமுன் எளிதாக முடியும். என் கொள்கைப்படி அவை உள்ளபடி காதலுக்குரிய நிலையில்லை. ஆசை பூர்த்தியாவது , மயக்க நிலையில் infatuation கவர்ச்சியான ஆர்வத்தைக் காதல் எனக் கொள்வது. காதல் Romance க்குரிய சில முக்கிய அம்சங்கள் பலன் எதிர்பாராதது Self-giving சுயநலமற்ற பரநலம் செயல்படுவது adventure உள்ளது அனைத்தையும் இழந்து இல்லாததை இலட்சியமாகக் கருதிப் பெற முயல்வது. இளமை , அழகு, ஆசை, ஆர்வம் ஆகியவற்றால் மட்டும் பெற முடியாதவை. கடமையோ, மனச்சாட்சிக்கோ காதலில் இடமில்லை.

காதலில் இடம் காதலுக்கு மட்டும் உண்டு.
சட்டம், தர்மம், கர்மம் செயல்படாத அரங்கம் இது.
**காதல் உண்மையானது எனக் குறிப்பவை பல.**
அவற்றுள் முதன்மையானது இனம் புரியாத சந்தோஷம்
இடைவிடாது எழுவது. நெஞ்சைப் ஸ்பர்சிப்பது எதுவானாலும் –
நல்லது, கெட்டது, கோபம், தாபம், சூடு, சொரணை, கஷ்டம், நஷ்டம் –
**அந்த இனம் புரியாத சந்தோஷம் தீவிரம் மிகுவது அந்த அடையாளம்.**

திருமணமான தம்பதிகள் வீட்டின் கட்டுப்பாட்டிற்கும் , மனச்சாட்சியின் எல்லைக்குள்ளும் இருக்கும் நிர்ப்பந்தமுள்ளவர்கள். **எல்லையில்லா இன்பம் எல்லைக்குள் எழுவது எப்படி ?** திருமணம் என்ற எல்லைக்குள் எல்லையில்லாக் காதல் உண்டு என்பது ஆன்மீக உண்மை. இதன் முறைகள் பல. பிறர் கோணத்தில் அவனுடைய கோணத்தில் அறிய முயல்வது அதனளவில் infinite எல்லையற்றது. கணவனை ஒரு விஷயத்தில் அவனுடைய கோணத்தில் அறிய முற்படும் மனைவிக்கு அல்லது அதையே அவளிடம் நாடும் கணவனுக்கு எல்லையற்ற அம்சம் எழும். அதன் மூலம் காதல் கண்ணுக்குத் தெரியும். இனம் புரியாத இன்பம் இடைவிடாது எழும். ஏனெனில் அவர் கோணத்தில் ஒருவரை அறிய முயன்றால் அதன் மூலம் அவர் ஆத்மா விழிப்படைந்து ஆவித்துணையாகி காதலுக்குரியவராவார். **ஒரு அம்சத்தால் ஒரு உயர்ந்த நிலையை அனுபவித்தவர்க்கு அனந்தமான காதல் அனைத்திலும் எழவல்லது எனப் புரியும்.** சுயநலமே மனிதனிடம் காணப்படுவதால் ஒருவர் சுயநலத்தை எக்காரணம் முன்னிட்டும் மற்றவர் பேணுதல் தவறு என்பது சரி. ஆனால் தன் பரநலம் எல்லையற்ற நிலையைக் காண அதையும் செய்யும் சந்தர்ப்பம் உண்டு. அடுத்தவருக்கு சுயநலமற்ற நல்ல எண்ணமுள்ள இடம் ஒன்று இருந்து விட்டால் அதைப் பேணுதல் உயர்ந்த பலனைக் கொடுக்கும். ஆரம்ப நாட்களில் பொறுமை அளவு கடந்து தேவைப்படும். குதர்க்கமானவர் 'எனக்குச் சேவை செய்ய உனக்கு அதிர்ஷ்டம் தேவை' என வெகு சீக்கிரம் உணர்ந்து பேசி விடுவார்கள். நினைப்பு அந்நிலையை எட்டினால் பலனிருக்காது.

பொதுவான நல்ல பண்புள்ள தம்பதிகளிடையே இந்த குறை எழாது என்பதால் **சுதந்திரமான அன்பில் கட்டுப்பாடான பண்பை பிறர் கோணத்தில் அறிய முயன்றால்**, காதல் எழுவது திண்ணம்.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி அவர்கள்
சொற்பொழிவாற்றியவர் : திருமதி. உஷா ராமதாஸ்
சொற்பொழிவாற்றிய தேதி: 06.07.2014